**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 408 of 2021

**ம.சா3 அன்றோவின் ஜீசஸ் எல்சின்**

| | |
|---|---|
| Name | : அன்றோவின் ஜீசஸ் எல்சின் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 05.02.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த மனுவில் 3ம்நபர் நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1. என்னுடைய ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் மூ.த.சா.ஆ 1

2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் அகரகட்டில் குடியிருக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். நான் பட்டயபடிப்பு படித்துள்ளேன். நான் சொந்தமாக நிலம் வைத்து விவசாயம் செய்கிறேன். விபத்து நடந்த அன்று நான் அகரகட்டில் இருந்து தென்காசிக்கு ஆட்டோவில் வந்தேன். நான் ஆட்டோவில் தனியாக தான் வந்தேன். என்னுடன் யாரும் வரவில்லை. நான் வந்த ஆட்டோ எண் தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரர் ஜெஸ்டின் எங்கள் ஊர்காரரர் ஆவார். மனுதாரர் எனக்கு உறவினரா என்றால் ஒரே தேவலாயத்திற்கு வரும் நண்பர் ஆவார். விபத்து நடந்த அன்று மனுதாரர் இருசக்கர வாகனத்தில் சற்று முன்னர் சென்று கொண்டிருந்தார். நான் பின்னால் ஆட்டோவில்வந்தேன். மனுதாரரின் இருசக்கர வாகனத்தின்

பதிவு எண் தெரியும். விபத்தானது வளைவான பகுதியில் நடந்தது என்றால் சரிதான். எதிரே வந்த வேன் தென்காசியில் இருந்து வந்தது. வளைவில் விபத்து நடந்த பிறகு கூட்டமாக இருந்த போது நான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். நான் சென்று பார்த்த பிறகு தான் அவர் விபத்தில் அடிபட்டு இருந்தது தெரிந்தது என்றால் சரிதான். அப்போது மனுதாரர் சுயநினைவில் இருந்தாரா என்றால் சுயநினைவில் இருந்தார். நான் தான் அதே ஆட்டோவில் மனுதாரரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என்னுடன் யாரும் வரவில்லை என்றால் சரிதான். என்னை இது சம்பந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள். இந்த வழக்கில் யார் மீது புகார் கொடுக்கப்பட்டது, யார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்ற விபரம் தெரியும். மனுதாரர் என் நண்பர், உறவினர் என்பதால் நான் நேரடியாக பார்க்காத சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என்னை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.